**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| 2024-ம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம் நாள் திங்கள்கிழமை வாதி தரப்பு -ம் சாட்சியின் வாக்கு மூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | **பாலசுப்பிரமணியன்** | தொழில் : | |
| த.பெ: | | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**18.3.2024 OS No.47/2020 வா.சா.1 பாலசுப்பிரமணியன் ஆஜர்**

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை :**

1. தாவா சொத்து சம்மந்தமாக பிரதிவாதி மகன் ரமேஷ் மீது வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கை திரும்ப பெற்றுவிட்டேன் என்றால் அம்மா, மகன் இருவர் மீது வழக்கு தாக்கல் செய்தேன். இரண்டும் ஒரே வழக்கு என்பதால் தாய் வழக்கினை நடத்துவோம் என அந்த வழக்கை திரும்ப பெற்றுவிட்டேன். நான் ரமேஷ் மீது தாக்கல் செய்த வழக்கு எண் மு.வ.எண்.63/2020 என்றால் சரிதான். புல எண்.126/6 தாவா சொத்தை தவிர 4 ஏக்கர் 51 செண்ட்டை ஏற்கனவே கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கிரையம் பெற்ற சொத்துக்களை பொறுத்து 2015லேயே பட்டா மாறுதல் உட்பிரிவு செய்து வாங்கிவிட்டேன். அதன்படி சர்வே எண்.126/6பி1-ல் எனக்கு 3 ஏக்கர் 51 செண்டுக்கு 1376 என பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. சர்வே எண்.126/6பி4-ல் எனக்கு 1 ஏக்கருக்கு 1376 என பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு சர்வே எண்.126/6பி3-ல் பட்டா எண்.1285-ல் முத்தையா செட்டியார் மற்றும் 34 பேர் பெயருக்கு 1 ஏக்கர் 66 செண்ட்டுக்கு பட்டா ஏற்பட்டிருந்தது என்றால் அது 1 ஏக்கர் தான் இருந்தது. அந்த 1 ஏக்கரையும் நான் கிரையம் பெற்றுவிட்டேன். தாவா சொத்துக்களை எந்த வருடம் கிரையம் வாங்கினேன் என்றால் 23.1.2012-ல் கிரையம் வாங்கினேன். எத்தனை ஆவணங்களாக வாங்கினேன் என்றால் வள்ளியப்பசெட்டியாரிடம் ஒரே ஆவணமாகதான் வாங்கினேன்.

3. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் புல எண்.126/6பி4 ஆகும். அது என் பெயருக்கு பட்டா உள்ளதா என்றால் பட்டா எண்.1376-ல் உள்ளது. எனக்கு தாவா சொத்து பொறுத்து வாங்கிய பட்டாவை ரத்து செய்துவிட்டார்கள் என்றால் ரத்து செய்யவில்லை. வா.சா.ஆ.5 ஆவணத்தில் என்னென்ன சர்வே எண்கள் உள்ளது என்றால் சர்வே எண்.126/6பி4, சர்வே எண்.126/6பி1 ஆகும்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.